## முக்கிய குறிப்புகள்

| | |
|---|---|
| **முழுமையான வெப்பநிலை** | கெல்வின் அளவுகோலிலுள்ள தனிச்சுழி வெப்பநிலையை பொறுத்து அளவிடப்படும் வெப்பநிலை முழுமையான வெப்பநிலை (அல்லது) வெப்பஇயக்கவியலின் வெப்பநிலை என அழைக்கப்படுகிறது. |
| **வெப்பச்சமநிலை** | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கிடையே எந்த வெப்ப ஆற்றல் பரிமாற்றமும் இல்லை எனில் அந்தப் பொருள்கள் வெப்பச்சமநிலையில் உள்ளது என்று பொருள். |
| **வெப்ப ஆற்றல் (அ) வெப்பம்** | வெவ்வேறு வெப்பநிலையில் உள்ள இரண்டு பொருட்களுக்கு இடையே ஆற்றல் பரிமாற்றம் அடைகிறது. இதன் SI அலகு ஜீல். |
| **கலோரி** | ஒரு கிராம் நிறையுள்ள நீரின் வெப்பநிலையை 1°C உயர்த்தத் தேவைப்படும் வெப்ப ஆற்றலின் அளவு ஒரு கலோரி எனப்படும். |
| **கிலோ கலோரி** | ஒரு கிலோகிராம் நிறையுள்ள நீரின் வெப்பநிலையை 1°C உயர்த்தத் தேவைப்படும் வெப்ப ஆற்றலின் அளவு ஒரு கிலோ கலோரி எனப்படும். |
| **திரவம் மற்றும் வாயுவில் வெப்பவிரிவு** | |
| **உண்மை வெப்ப விரிவு** | கொள்கலன் இல்லாமல் நேரடியாக திரவத்தினை வெப்பப்படுத்தும் போது ஏற்படும் வெப்ப விரிவு.<br>★ ***உண்மை வெப்ப விரிவு குணகம்*** : ஓரலகு வெப்பநிலை உயர்வால் திரவத்தில் அதிகரிக்கும் உண்மை பருமனுக்கும் அத்திரவத்தின் ஓரலகு பருமனுக்கும் உள்ள தகவு. |
| **தோற்ற வெப்ப விரிவு** | கொள்கலனின் விரிவினை பொருட்படுத்தாமல் திரவத்தின் தோற்ற விரிவினை மட்டும் கணக்கில் கொள்வதே திரவத்தின் தோற்ற வெப்ப விரிவு எனப்படும்.<br>★ ***தோற்ற வெப்ப விரிவு குணகம்*** : ஓரலகு வெப்பநிலை உயர்வால் திரவத்தில் அதிகரிக்கும் தோற்ற பருமனுக்கும் அத்திரவத்தின் ஓரலகு பருமனுக்கும் உள்ள தகவு உண்மை தோற்ற விரிவு குணகம் என அழைக்கப்படும். |
| **பாயில் விதி** | மாறா வெப்பநிலையில், ஒரு குறிப்பிட்ட நிறையுடைய வாயுவின் அழுத்தம் அவ்வாயுவின் பருமனுக்கு எதிர்த்தகவில் அமையும். |
| **சார்லஸ் விதி** | மாறா அழுத்தத்தில் வாயுவின் பருமன் அவ்வாயுவின் வெப்பநிலைக்கு நேர்த்தகவில் அமையும். |
| **அவகேட்ரோ விதி** | மாறா வெப்பநிலை மற்றும் அழுத்தத்தில், வாயுவின் பருமன் அவ்வாயுவில் உள்ள அணுக்கள் அல்லது மூலக்கூறுகளின் எண்ணிக்கைக்கு நேர்த்தகவில் அமையும். |
| **இயல்பு வாயுக்கள்** | குறிப்பிட்ட கவர்ச்சி விசையினால், ஒன்றோடொன்று இடைவினை புரிந்து கொண்டிருக்கும் அணுக்கள் அல்லது மூலக்கூறுகள் அடங்கிய வாயுக்கள் இயல்பு வாயுக்கள் என அழைக்கப்படும். |
| **நல்லியல்பு வாயுக்கள்** | ஒன்றோடொன்று இடைவினை புரியாமல் இருக்கும் அணுக்கள் அல்லது மூலக்கூறுகள் அடங்கிய வாயுக்கள் நல்லியல்பு வாயுக்கள் ஆகும். |

### முக்கியமான சூத்திரங்கள்

★ நீள் வெப்பவிரிவு, $\frac{\Delta L}{L_0} = \alpha_L \Delta T$

★ பரப்பு வெப்பவிரிவு, $\frac{\Delta A}{A_0} = \alpha_A \Delta T$

★ பரும வெப்பவிரிவு, $\frac{\Delta V}{V_0} = \alpha_V \Delta T$

### முக்கியமான விதிகள்

★ பாயில் விதி, $P \alpha \frac{1}{V}$ ***(i.e)*** PV = மாறிலி

★ சார்லஸ் விதி, $V \alpha T$ ***(i.e)*** $\frac{V}{T}$ = மாறிலி

★ அவகேட்ரோ விதி, $V \alpha n$ ***(i.e)*** $\frac{V}{n}$ = மாறிலி

★ நல்லியல்பு வாயுச் சமன்பாடு, PV = RT

### முக்கியமான SI அலகுகள்

★ வெப்பநிலை - கெல்வின் (K)

★ வெப்ப ஆற்றல் - ஜூல் (J)

### முக்கியமான மதிப்புகள்

★ அவகேட்ரோ எண் = $6.023 \times 10^{23}$ /மோல்.

★ போல்ட்ஸ்மேன் மாறிலி = $1.381 \times 10^{-23}\ JK^{-1}$

★ பொது வாயு மாறிலி = 8.31 J மோல்$^{-1}$ $K^{-1}$

### முக்கியமான வெப்பநிலை அளவுகோல்கள்

★ ஃபாரன்ஹீட்டிலிருந்து செல்சியஸ்: $°C = \frac{5}{9}(°F - 32)$

★ செல்சியஸிலிருந்து ஃபாரன்ஹீட் : $°F = \frac{9}{5}°C + 32$

★ கெல்வின்-லிருந்து செல்சியஸ் : $K = °C + 273.15$

★ செல்சியஸிலிருந்து கெல்வின் : $°C = K - 273.15$

★ ஃபாரன்ஹீட்டிலிருந்து கெல்வின் : $K = (°F + 460) \times \frac{5}{9}$

★ கெல்வின்-லிருந்து ஃபாரன்ஹீட் : $°F = \frac{9}{5} K - 460$